கொள்முதல் செய்வதுடன், இந்த ஆண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய அறிவுரையின்படி, உளுந்து, பயறு போன்றவற்றையும் கொள்முதல் செய்வதற்கான வாய்ப்புகளை விவசாயிகளுக்கு தமிழ்நாடு அரசு உருவாக்கியிருக்கிறது என்பதனையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—50

கிடங்குகள் கட்டுமானத்தைப் பொறுத்தவரை, 2011 ஆம் ஆண்டு வரை 12 இலட்சத்து 93 ஆயிரம் மெட்ரிக் டன்னாக இருந்த கொள்ளளவினை 7 ஆண்டுகளில் 23 இலட்சத்து 28 ஆயிரம் மெட்ரிக் டன்னாக உயர்த்தித் தந்தது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்பதனை இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) போதுமான கிடங்குகள் அந்தந்தப் பகுதியில் தேவைக்கேற்ப அமைத்துக் கொடுப்பதற்கான அத்தனை நடவடிக்கைகளையும் மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் நடைபெறும் அரசு தொடர்ந்து எடுத்து வருகிறது என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 277, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். விஜியகுமார், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

277—

ஆரம்ப சுகாதார நிலையம்

***14733—திரு. கே.எஸ். விஜியகுமார்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், ராக்கம்பாளையம் ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

2018 ஜூலை 5]

கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்தில் போதுமான ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்ற காரணத்தினால் தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். விஜியகுமார் அவர்கள்.

திரு. கே.எஸ். விஜியகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி நீரைப் பெற்றுத் தர வேண்டுமென்ற இலட்சியத்தோடு, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தின் விவசாய மாவட்டங்களைக் காப்பாற்ற வேண்டுமென்கின்ற குறிக்கோளோடு, மத்திய அரசை எதிர்த்தும், சட்டப் போராட்டம் மூலமும் காவேரி நீரைப் பெற்றுத் தந்த, எங்களையெல்லாம் வாழவைத்த இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்கு காவேரி நீரைப் பெற்றுத் தந்த காவேரி நாயகன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், அவருக்கு உறுதுணையாக இருக்கின்ற ஜல்லிக்கட்டு நாயகன் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும், இன்று தமிழக சுகாதாரத் துறையை இந்திய அரசே வியக்கின்ற அளவிற்கு பல்வேறு விருதுகளைப் பெற்றுத் தந்திருக்கிற நம்முடைய மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

ராக்கம்பாளையம் பகுதியிலே ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் வேண்டுமென்று கேட்டிருக்கின்றேன். ஏனென்று சொன்னால், சென்னையிலிருந்து 35 கிலோ மீட்டர் தொலைவில் என்னுடைய தொகுதி ஆரம்பமாகின்றது. சென்னையின் அருகிலே இருந்தாலும்கூட, 131 ஊராட்சிகளும், 2 பேரூராட்சிகளும் கொண்ட தொகுதியாக கும்மிடிப்பூண்டி தொகுதி விளங்கிக் கொண்டிருக்கின்றது. மக்கள் சிகிச்சைக்கென ராக்கம்பாளையத்திலிருந்து 8 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சுண்ணாம்புகுளம் ஆரம்ப சுகாதார நிலையம் செல்ல வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதேபோல, கும்மிடிப்பூண்டி அரசு மருத்துவமனைக்கு வர வேண்டுமென்று சொன்னால், சுமார் 18 கிலோ மீட்டர் தூரம் வர வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது.

[2018 ஜூலை 5

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்) தலைமை]

அந்தப் பகுதி விவசாயம் நிறைந்த பகுதி; நஞ்சை நிலமும், புஞ்சை நிலமும் கொண்ட பகுதியாக இருக்கின்றது. அந்தப் பகுதி மக்களை பாம்பு மற்றும் விஷப் பூச்சிகளெல்லாம் கடித்து அவர்கள் மருத்துவமனைக்கு செல்வதற்குள்ளாகவே மரணமடையும் சூழ்நிலையும் ஏற்படுகின்றது. ஆகவே, அங்கு ஆரம்ப சுகாதார நிலையம் வேண்டுமென்று அவர்கள் கேட்டிருக்கின்றார்கள். எனவே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் அங்கு ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்குவதற்கு கனிவோடு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அன்புச் சகோதரர் திரு. கே.எஸ். விஜியகுமார் அவர்கள் தொடர்ந்து அவருடைய தொகுதிக்கு நல்ல பணிகளையெல்லாம் செய்ய வேண்டுமென்று கேட்டு வருகின்றார். அவருடைய தந்தை காலத்திலிருந்தே நாங்கள் சட்டமன்ற உறுப்பினராக இருக்கக்கூடிய வாய்ப்பை மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆசியோடு பெற்றிருக்கின்றோம். தங்களுடைய தொகுதியில் ஆரம்பாக்கம், காரப்பட்டி, சுண்ணாம்புகுளம் ஆகிய மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்கள் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் கொடுக்கப்பட்டன; ஈகுவார்பாளையம் தரம் உயர்த்தப்பட்டது. நீங்கள் பல்வேறு சூழ்நிலைகளைச் சொல்லியிருக்கின்றீர்கள். அதையெல்லாம் ஆய்ந்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழியில் நடைபெறும் அரசு கனிவோடு தங்களுடைய கோரிக்கையைப் பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். விஜியகுமார் அவர்கள்.

திரு. கே.எஸ். விஜியகுமார்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை

செய்வதாகக் கூறியிருக்கின்றார்கள். அதற்கு முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், ராக்கம்பாளையத்தில் இன்றைக்கு Rotary Club of Madras Midtown சார்பில், சேவகம் கிளினிக் மூலமாக ஒரு தனியார் மருத்துவரைக் கொண்டு காலை 9–30 மணி முதல் மாலை 4 மணி வரை அந்தப் பகுதியில் இருக்கின்ற பொதுமக்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. அந்தப் பகுதியிலே முன் விரோதம், உள்ளாட்சித் துறை சார்ந்த பல்வேறு பிரச்சினைகளும், சேவகம் கிளினிக் நடத்துவதிலே சில பிரச்சினைகளும் இருக்கின்றன. அந்தப் பகுதி விவசாயம் சார்ந்த பகுதியாக இருக்கின்றது. விதிகளுக்குட்பட்டு பல்வேறு ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள்; பரப்பளவில் அதிகமாக இருக்கின்றது. ஒரு ஊராட்சியிலிருந்து மற்றொரு ஊராட்சிக்குச் செல்ல வேண்டுமென்றால் சுமார் 6 கிலோ மீட்டர், 8 கிலோ மீட்டர் தூரம் இருக்கின்றது. ஒவ்வொரு கிராமப் பகுதியிலிருந்தும், உள் வட்டத்தில் இருக்கின்ற hamlet–க்குச் செல்வதற்குக்கூட 3 கிலோ மீட்டர் தூரம் வருகிறது. அதேபோல எங்களுடைய பகுதி vast area. இங்கு இருக்கின்ற பெரும்பாலான மாண்புமிகு அமைச்சர்களுக்கு என்னுடைய தொகுதியைப் பற்றி நன்கு தெரியும்.

முற்பகல் 10–55

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு உறுப்பினர் திரு. விஜியகுமார், கேள்வியைக் கேளுங்கள்.

திரு. கே.எஸ். விஜியகுமார்: ஏனென்றால், என்னுடைய தொகுதியில் by–election வந்தபோது, அனைத்து அமைச்சர்களும் வந்திருக்கிறார்கள். என்ன விஜி, இவ்வளவு பெரிய தொகுதியை வைத்திருக்கிறீர்கள் என்று அவர்களே சொன்னார்கள். ஆகையால், ஏதாவது ஒரு திட்டத்தின் மூலமாக அங்கு ஒரு மருத்துவமனையை அமைக்க வேண்டும். அங்கு ஒரு மருத்துவராவது பணியாற்றுவதற்கு இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்

பல்வேறு சூழ்நிலைகளையெல்லாம் இங்கே குறிப்பிட்டார்கள். அதையெல்லாம் அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டுதான், இந்த ஆண்டு ஒரு புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியிருக்கிறோம். அதாவது, மகத்தான மருத்துவ கிராமப்புற மருத்துவச் சேவையை உறுதிப்படுத்துவதற்கான, Double VHN system–அனைவருக்கும் நல வாழ்வு என்ற திட்டத்தில், Health and Wellness Centre என்ற ஒரு புதிய திட்டத்தை இந்தியாவிலேயே முதன்முதலாக நாம் அறிமுகப்படுத்துகிறோம். ஏற்கெனவே, நான் இந்தச் சட்டமன்றத்தில் சொன்னபடி, 985 கிராம சுகாதார செவிலியர்கள் புதிதாக நியமிக்கப்படுகிறார்கள். அதில், திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி சட்டமன்றத் தொகுதியில் உள்ள எல்லாபுரம் ஒன்றியம்தான் எடுக்கப்பட்டிருக்கிறது. அது vast area என்று சொன்னதால் எடுக்கப்பட்டிருக்கிறது. அந்த எல்லாபுரம் ஒன்றியத்தில் ஏற்கெனவே செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற அனைத்து sub–centres–லும் additional ஆக ஒரு VHN–செவிலியர் போட்டு, அங்கு First Aid, NCD Drugs, immunisation programme–ஐ நாம் மிகவும் effective ஆக செய்யப் போகிறோம். இன்னும் சொல்லப்போனால், ராக்கம்பாளையம் கிராமத்திற்குக் கூடுதலாக நடமாடும் மருத்துவக் குழு மூலமாகக் கூடுதல் கவனம் செலுத்த நிச்சயமாக நான் அறிவுறுத்துகிறேன். தொடர்ந்து இதுசம்பந்தமாக எவ்வளவு விரைவாக நடவடிக்கை எடுக்க முடியுமோ, அந்த அளவுக்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியண்ணன் அரசு அவர்கள்.

திரு. பெரியண்ணன் அரசு: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஒரு செய்தி. அதாவது, புதுக்கோட்டை நகரத்தினுடைய மத்தியப் பகுதியில், டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி அவர்களுடைய பெயரிலே, மாநகர அளவிலே ஒரு மருத்துவமனை தொடங்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஆனால், அங்கு மருத்துவக் கல்லூரி தொடங்கப்பட்டதற்குப் பிறகு, அந்த மருத்துவமனை செயல்படவில்லை.

அதேபோல, ராணி மருத்துவமனை என்பது மகப்பேறு மருத்துவமனை. அந்த மருத்துவமனைக்குப் புதிய கட்டடங்கள்

2018 ஜூலை 5]

கட்டப்பட்டிருக்கின்றன. ஆனால், அந்த இரண்டு மருத்துவமனைகளும் இன்றைக்கு மூடிக் கிடக்கின்றன. இதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ன செய்யப் போகிறார்கள்?

அடுத்து, கறம்பக்குடி ஒன்றியம், புதுப்பட்டி பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றை ஏற்படுத்துவதற்காக துறை அதிகாரிகள் எல்லாம் வருகை தந்து, அந்த ஊர் பொதுமக்களின் சார்பிலே கட்டடங்கள் கொடுக்கப்பட்டன. அதற்கு என்ன வழி என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் என்ன செய்யப் போகிறார் என்று கேட்டார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு எல்லாம் செய்யப் போகிறார், செய்து கொண்டிருக்கிறார் என்பதை அன்போடு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுக்கு ஏற்கெனவே தெரியும். இந்திய மருத்துவக் குழுவின்* (MCI) *விதிமுறைப்படி, ஒரு மருத்துவக் கல்லூரி தொடங்கப்படுகின்றபோது, அனைத்து மருத்துவப் பிரிவுகளும் ஒரே இடத்திலே இருக்க வேண்டும். அந்த வகையில்தான், 150 மாணவர்களோடு, மிகச் சிறப்பான மருத்துவக் கல்லூரி கொடுக்கப்பட்டு, இன்றைக்கு அனைத்துத் துறைகளிலும் மிகச் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நம்முடைய மாவட்டத்திற்கு புதிய* Cancer Centre, Cobalt therapy, C.T. Scan, M.R.I. *போன்றவற்றை வழங்கியிருக்கிறார்கள். பழைய* campus*–ல் அது செயல்படாமல் இல்லை. அங்கே அவசரத்திற்கென ஒரு* Ambulance *உள்ளது,* 24 x 7, *அதாவது 24 மணி நேரமும் ஒரு* male and female *மருத்துவர்கள் பணிபுரிகின்றனர். சித்த மருத்துவப் பிரிவு உள்ளது. வருங்காலங்களில்* TANSACS*–னுடைய நம்பிக்கை மையம் என்பன போன்ற பல்வேறு பிரிவுகளை அந்தக் கட்டடங்களில் உள்ளடக்கிப் பயன்படுத்துவதற்கு ஏதுவாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. கூடுதல் கருத்துருக்களும் அரசினுடைய பரிசீலனையில் இருக்கின்றன. பழைய* campus*–லும் நோயாளிகளுக்கு வேண்டிய சிகிச்சைகள் வழங்கப்படுமென்ற நல்ல தகவலை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

இரண்டாவதாக, தாங்கள் குறிப்பிட்ட புதுப்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது குறித்து அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. வரும் நிதியாண்டில், புதுப்பட்டி பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஒப்புதல் வழங்கும் என்ற நல்ல செய்தியை மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ராஜேந்திரன், அரசு தலைமைக் கொறடா அவர்கள்.

திரு. சு. ராஜேந்திரன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இமய அளவு புகழினை இந்திய அரசியலில் பெற்றவர், தமிழகத்தின் அமைதி, வளம், வளர்ச்சி இவை மூன்றும் தனது மூச்சாக எண்ணி, ஓய்வறியாது உழைத்தவர் நினைவு போற்றி, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆன்மாவை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் அவர்களுக்கும் எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கடந்த முறை நான் இப்பேரவையில் வைத்த கோரிக்கையினை ஏற்று, அரியலூர் மாவட்ட மக்களின் நலன் கருதி, மருத்துவத் துறைக்கான இணை இயக்குநர் நலப் பணி அலுவலகம் அமைத்திட துறை ரீதியான கருத்துருக்களை விரைந்து பெற்று, உரிய நடவடிக்கையினை மேற்கொண்டுள்ள மாண்புமிகு அம்மா அவர்களின் வழிநடந்திடும் இந்த நல்ல அரசிற்கும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினை உரித்தாக்கிக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

முற்பகல் 11—00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. சு. ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் மாவட்டம், அரியலூர் தொகுதிக்குட்பட்ட

2018 ஜூலை 5]

திருமானூர் ஒன்றியத்தில் திருமழபாடி ஊராட்சியில் சுமார் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றார்கள். சுற்றுப்பகுதியில் உள்ள கிராமங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வாழும் மையப் பகுதியாக, ஒரு சிறு நகரமாக திருமழபாடி விளங்கி வருகிறது. இப்பகுதியிலுள்ள மக்கள் சிகிச்சைக்காக சுமார் 12 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள பளிங்காநத்தம், திருமானூர் ஆகிய ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் சென்று சிகிச்சை பெற்று வருகின்றனர். எனவே, சுமார் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இப்பகுதியைச் சேர்ந்த மக்கள் விரைவாக, அதிக சிரமமின்றி சிகிச்சையினைப் பெற்றிட அரியலூர் மாவட்டம், திருமானூர் ஒன்றியம், திருமழபாடியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்திட மக்கள் நலன் காத்திடும் அரசு, மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் ஆட்சி நடத்திடும் இந்த நல்லரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழியில் செயல்படும் அரசு, ஏழைக்கு எட்டாக் கனியாக இருந்த காலத்தையெல்லாம் மாற்றி, இன்றைக்கு உள்ளங்கை நெல்லிக்கனியாக மகத்தான ஒரு மருத்துவச் சேவையை வழங்கிக் கொண்டிருக்கின்றது. பொதுவாக 8 கிலோ மீட்டருக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் இருக்க வேண்டும் என்பது நியதி. அதன் அடிப்படையில் நம்முடைய அரசு தலைமைக் கொறடா அவர்களுடைய கோரிக்கையை துறையின் மூலமாக உரிய ஆய்வு செய்து, உரிய நடவடிக்கை எடுத்து அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 278, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*